**செய்தி வெளியீடு**

சட்டம் தொடர்புடைய துறைகளில் இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

2. இந்திய அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ள மொழி எதிலும் பின்வரும் பணி எதனையும் புரிந்து வருகிற அத்தகைய அமைப்புகளுக்கு மானியம் கிடைக்கத்தக்கதாகும், அவையாவன :-

(i) மூலமுதலான சட்டப்புத்தகங்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,

(ii) தரமான சட்டப்புத்தகங்கள் அல்லது செம்மொழி இலக்கியங்களை மொழி பெயர்ப்பு செய்தல் மற்றும் வெளியிடுதல்,

(iii) சட்டச் சொல்லகராதியினைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,

(iv) சட்டப் பத்திரிக்கைகளை வெளியிடுதல்,

(v) சட்டம் தொடர்புடைய துறைகளில் இந்தி அல்லது மாநிலங்களின் பிற ஆட்சி மொழிகளை மேம்படுத்தலாகும் மற்றும் பரப்பலாகும் பிற வெளியீடு எதுவும், மற்றும்

(vi) மண்டல மொழிகளுடன் சேர்ந்திருக்கும் அதனுடைய இந்தி வாசகத்தினாலான பணிகளுக்கு கூடுதல் மானியங்கள் வழங்குவதற்கு பரிசீலிக்கப்படுதல்.

3. விண்ணப்பப் படிவம் மற்றும் திட்டத்தின் நகல் மைய அரசின் சட்ட அமைச்சகத்தின் www.Lawmin.nic.in/olwing என்கின்ற இணைய தளத்தில் கிடைக்கக் கூடியதாகும். கூடுதல் தகவல் மற்றும் விண்ணப்பப் படிவம் பெறுவதற்கு, இணைச் செயலாளர் மற்றும் சட்ட ஆலோசகர் (ஆட்சி மொழிப் பிரிவு) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் சட்டமியற்றுத் துறை, ஆட்சிமொழிகள் பிரிவு, அறை எண்.725, 7–வது தளம், 'அ', பிரிவு சாஸ்திரி பவன், புதுதில்லி – 110 001. (தொலைபேசி எண்.011–2338 6229, தொலை நிகரி எண்.011–2338 7051) என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 2017 ஜுலை 16 முதல் 2017 ஆகஸ்ட் 31 வரையிலான கால அளவிற்குள் மேற்சொன்ன அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**